Register No. | | | | | | | | |

**TA4A** **5151–22**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

# LAW OF EVIDENCE

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "In every confession there is an admission to prove that relevant facts" – Examine.

   "ஒவ்வொரு குற்ற ஏற்புரையிலும், ஒரு ஏற்புரை தொடர்புடைய பொருண்மைகளை நிரூபிக்க இருக்கின்றது" – ஆராய்க.

2. "The role of documentary evidence is appreciable in civil and criminal case" – Discuss.

   "உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் ஆவண சாட்சியங்களின் பங்கு பாராட்டுதலுக்குரையது" – விவாதிக்கவும்.

3. "Presumptions reduce the burden of proof for parties" – Comment.

   "அனுமானங்கள் தரப்பினர்களின் மெய்பிக்கும் சுமையை குறைக்கின்றது" – கருத்தாய்வு செய்க.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the doctrine of estoppel and its kinds.

   முரண்தடை கோட்பாடு மற்றும் அதன் வகைகளை விளக்குக.

5. Discuss the different types of ambiguity in the Indian Evidence Act.

இந்திய சாட்சிய சட்டத்தில் உள்ள பல்வேறு வகையான பொருள்மயக்கங்களை விவாதிக்கவும்.

6. When judgement of courts are relevant in court proceedings?

நீதிமன்ற நடவடிக்கைகளில், நீதிமன்ற தீர்ப்புகள் எப்போது தொடர்புடையதாக்கப்படுகின்றன?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Identification parade

அடையாள அணி வகுப்பு

(b) Compromise of cases

வழக்குகளை சமரசம் செய்வது

(c) Judicial Notice

நீதிமன்ற அறிவிப்பு

(d) Circumstantial Evidence

சூழ்நிலை சாட்சியம்

(e) Ancient Document

பழமையான ஆவணம்

(f) Civil Death

உரிமையியல் மரணம்

(g) Child witness

குழந்தை சாட்சியம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons :

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' a corona patient before death says that he died because of wrong treatment of doctors. Is A's statement admissible?

'அ' என்கின்ற கொரோனா நோயாளி இறக்கும் முன், தனது மரணத்திற்கு மருத்துவர்கள் தவறான சிகிட்சையே காரணம் என்று கூறியுள்ளார். இந்த வாக்குமூலம் ஏற்புடையதா?

9. 'X' was not found for 7 years. The court passed a judgment that he died. Later 'X' returned after 8 years. Decide the validity of judgment.

'X' என்வர் 7 வருடங்களாக காணவில்லை. நீதிமன்றம் அவர் இறந்து விட்டதாக தீர்ப்பு வழங்குகின்றது. 8 வருடங்களுக்கு பிறகு 'X' திரும்பி வருகின்றார். அந்த தீர்ப்பின் செல்லும் தன்மையை முடிவு செய்யவும்.

10. 'A' orally gifts a property to 'B'. 'B' was in enjoyment for 12 years. Later 'A' sued 'B' for cancellation of oral gift. Decide.

'அ' என்பவர் வாய்மொழியாக 'ஆ' என்பவருக்கு சொத்தை கொடை கொடுக்கின்றார். 'ஆ' என்பவர் அச்சொத்தை 12 வருடங்களாக அனுபவிக்கின்றார். பின்னர் அந்த வாய்மொழி கொடையை ரத்து செய்வதற்கு 'அ' என்பவர் 'ஆ' என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்கின்றார். முடிவு செய்க.

---

Register No. | | | | | | | | |

**TA4B**

5248–22

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three - year Regular Course)

Second Year – Fourth Semester

ADMINISTRATIVE LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Administrative law is the law relating to the administration. It determines the organisation, powers and duties of administrative authorities" - Elucidate.

   "ஆட்சி முறைக்கு சம்பந்தமான சட்டமே நிர்வாக சட்டம் இது நிருவாகப் பொறுப்பிலுள்ளோர்களின் அமைப்பு, அதிகாரம் மற்றும் கடமைகளை நிர்ணயிக்கின்றது" - தெளிவுபடுத்துக.

2. Describe the different modes of judicial control of delegated legislation with the help of decided cases.

   விதியாக்க ஒப்படைப்புக் குறித்தான வெவ்வேறு வகையான நீதித்துறை கட்டுப்பாட்டை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு விவரி.

3. "No man shall be a judge of his own cause." Discuss with the help of decided cases.

   ஒருவர் தன்னுடைய வழக்கில் தானே நீதிபதியாக இருக்க முடியாது என்ற கோட்பாட்டை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the applicability of 'estoppel' doctrine in administrative law with the help of decided cases.

   தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு நிர்வாகவியல் சட்டத்தில் முரண்தடை கோட்பாட்டின் பயன்பாட்டினை விளக்குக.

5. Describe the privileges of government in legal proceedings.

சட்ட நடவடிக்கைகளில் அரசுக்குள்ள சிறப்புரிமைகளைப் பற்றி விவரிக்க.

6. Explain the elements of the principle of 'Audi Alteram Partem' with the help of decided cases.

"இரு பக்கம் கேட்டல் விதி" என்ற கோட்பாட்டின் காரணிகளை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு விவரி.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Henry VIII clause

ஹென்றியின் எட்டாவது வதி

(b) Governmental control on public corporation

பொது நிறுவனங்களின் மீதான அரசின் கட்டுப்பாடு

(c) S.P. Gupta V. Union of India AIR 1982, SC 149

எஸ்.பி. குப்தா எதிர் இந்திய ஒன்றிய அரசு AIR 1982, SC 149

(d) Post decisional hearing

முடிவுக்குப் பின் விசாரணை

(e) Judicial Review

நீதிமுறை மறு ஆய்வு

(f) Writ of certiorari

ஆவணக் கேட்பு நீதிப்பேராணை

(g) Notice under Section 80 C.P.C. 1908.

உரிமையியல் நடைமுறை சட்டம், 1908 பிரிவு 80-ன் கீழான அறிவிப்பு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases . Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The chairman of Industrial Finance Commission dismissed an employee. This order was challenged before the Board of the employee. The chairman was an ex-officio member of the Board. The Board also obtained chairman's opinion on the appeal preferred by the employee. Ultimately the order of Chairman was confirmed by the Board. The employee challenged the Board's order. Will he succeed?

தொழிற்துறை நிதி ஆணையத்தின் தலைவர், பணியாளர் ஒருவரை பணி நீக்கம் செய்கிறார். இந்த உத்தரவை எதிர்த்து பணியாளர் வாரியத்திற்கு முறையீடு செய்கிறார். அவ்வாரியத்தில் ஆணையத்தின் தலைவர் பதவி வழி உறுப்பினராக உள்ளார். பணியாளரின் மேல் முறையீடு சம்பந்தமாக வாரியம், ஆணையத் தலைவரின் கருத்துக்களை கேட்கிறது. இறுதியாக ஆணையத் தலைவரின் உத்தரவினை வாரியம் உறுதி செய்கிறது. பணியாளர் வாரியத்தின் உத்தரவை எதிர்க்கிறார். அவர் வெல்வாரா?

9. 'X' was injured by the iron rods left on the road, by the road contractor. 'X' filed a suit for damages against the state - Decide.

சாலையோரம் ஒப்பந்தக்காரரால் போடப்பட்டிருந்த இரும்புக் கம்பிகளால் "X" என்பவர் காயம் அடைந்தார். அரசுக்கு எதிராக இழப்பீடு கேட்டு 'X' என்பவர் வழக்கு தொடர்ந்தார். தீர்மானிக்கவும்.

10. Under the Essential Commodities Act, the authority has fixed the price of the essential commodities. 'X', a merchant, challenged the price fixation on the ground that he was not heard before fixing the price. Decide.

அத்தியாவசிய பொருள்கள் சட்டத்தின்படி ஒரு அதிகாரி அத்தியாவசிய பொருள்களின் விலையை நிர்ணயம் செய்கின்றார். 'X' என்ற வியாபாரி விலை நிர்ணயம் செய்யப்படும் முன்பு தனது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று மறுதலிக்கின்றார். முடிவு செய்க.

---

Register No. | | | | | | | | |

# TA4C

5249–22

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

LABOUR LAW – I

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the machineries provided under the Industrial Disputes Act for the investigation and settlement of Industrial disputes.

   தொழில் தகராறு சட்டத்தின் கீழ் தகராறுகளை விசாரணை செய்யவும், அறுதியிடவும் வழிவகுக்கப்பட்டுள்ள இயக்க அமைப்புகளை விளக்குக.

2. Explain the Constitutional validity of the Minimum Wages Act with decided cases.

   குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் அரசமைப்புச் சட்ட செல்லும் தன்மையினை முடிவுற்ற வழக்குகளை கொண்டு விளக்குக.

3. State the conditions and procedure prescribed for the registration of a Trade Union under the Trade Unions Act, 1926.

   1926-ம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டத்தின் கீழ் தொழிற்சங்கங்களை பதிவு செய்வது குறித்து நிபந்தனைகளையும், நடைமுறைகளையும் கூறுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the salient features of the Industrial Employment (Standing orders) Act 1946

   1946 ஆம் ஆண்டு தொழிற்சாலை பணிகள் (நிலையாணைகள்) சட்டத்தின் முக்கியமான அம்சங்களை விளக்குக.

5. Explain the various deductions authorised under the Payment of Wages Act, 1936.

1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட ஊதியப் பிடித்தங்கள் பற்றி விளக்குக

6. What is Collective Bargaining? Explain advantages and disadvantages in Collective Bargaining.

கூட்டுப் பேரம் என்றால் என்ன? கூட்டுப் பேரத்தின் நன்மைகள் மற்றும் தீமைகள் குறித்து விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Award

தீர்வம்

(b) Fair wage

நியாயமான கூலி

(c) Equal remuneration

சம ஊதியம்

(d) International Labour Organisation

பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு

(e) Difference between Lockout and closure

கதவடைப்பு மற்றும் மூடுதலின் வேறுபாடுகள்.

(f) Inspectors under the Payment of Wages Act, 1936.

1936 ஆம் ஆண்டு ஊதிய வழங்கல் சட்டத்தின் கீழ் ஆய்வாளர்கள்.

(g) Disqualification of office bearers of the Trade Union.

தொழிற்சங்க நிர்வாகிகளின் தகுதி இழப்பு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The employees of Vijaya Mill & Co. resorted to a sympathetic strike. The management refused to pay wages on that day. The employees filed a suit against this. Whether they will succeed?

விஜயா மில்லில் பணிபுரியும் பணியாளர்கள் அனுதாப வேலை நிறுத்தம் செய்தார்கள். நிர்வாகம் அந்த வேலைநிறுத்த நாளுக்கு சம்பளம் கொடுக்க மறுத்தது. தொழிலாளர்கள் இதனை எதிர்த்து உரிமையியல் வழக்கு தாக்கல் செய்தார்கள். அவர்கள் வெல்வார்களா?

9. The employees of a worshipping place submitted an application to the registrar of trade union to register their union. It was refused on the ground that the place of worship is not an "Industry". Decide.

ஒரு வழிபாட்டு இடத்தில் பணியாற்றக் கூடிய ஊழியர்கள் தொழிற்சங்கங்களின் பதிவாளரிடம் தங்களுடைய சங்கத்தினை பதிவு செய்திட விண்ணப்பம் அளிக்கின்றனர். வழிபாடு செய்யக்கூடிய இடம் தொழில் அல்ல என்ற காரணத்தினால் பதிவு மறுக்கப்படுகிறது. தீர்மானிக்க.

10. Suresh worked from October 2012 to October 2021. He was retrenched from work – His last drawn salary was Rs. 10,000. Calculate the retrenchment compensation.

சுரேஷ் என்பவர் அக்டோபர் 2012 முதல் அக்டோபர் 2021 வரை பணிபுரிந்துள்ளார். அவர் ஆட்குறைப்பு செய்யப்படுகின்றார். கடைசியாக அவர் பெற்ற சம்பளம் ரூ10,000. ஆட்குறைப்பு நஷ்டஈடு தொகையினை கணக்கிடுக.

---

Register No. | | | | | | | | |

**TA4D**

5152–22

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

INTERNATIONAL LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define International Law and explain the origin and development of International law.

   நாட்டிடைச் சட்டத்தை வரையறை செய்து நாட்டிடைச் சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை விளக்குக.

2. Explain the various modes of acquiring and losing nationality. What are the problems arising out of double nationality and statelessness?

   நாட்டுரிமையை பெறுவதற்கும் இழப்பதற்கும் உரிய முறைகளை விளக்குக. இரு நாட்டுரிமை மற்றும் நாடின்மையால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை?

3. Discuss the nature of the jurisdiction of the International Court of Justice. How are the decision of the court enforced?

   பன்னாட்டு நீதிமன்றத்தின் அதிகாரவரம்பின் இயல்பைக் குறிப்பிடுக. எவ்வாறு நீதிமன்றததின் தீர்ப்புகள் செயல்படுத்தப்படுகின்றன?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the laws relating to extradition and asylum.

   மீட்டொப்படைப்பு மற்றும் புகலிடம் பற்றி சட்டங்களை விளக்குக.

5. Examine Blackstone's doctrine that the law of nations is part of the law of the land.

நாட்டிடைச் சட்டம் உள்நாட்டுச் சட்டத்தின் ஒரு பகுதியே எனும் பிளாக்ஸ்டோனின் கோட்பாட்டை ஆராய்க.

6. Define 'State' and explain the different kinds of states.

'நாடு' என்பதை வரையறை செய்து பல்வேறு வகையான நாடுகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) De jure belli ac pacis

டி ஜூரே பெல்லி அக் பேசிஸ்

(b) Five freedoms of Air

காற்று மண்டலத்தின் ஐந்து சுதந்திரங்கள்

(c) Jus Cogens

ஜெஸ் கோஜன்ஸ்

(d) Continental shelf

கண்டத்திட்டு

(e) Nuremberg Trial

நியூரம்பக் வழக்கு விசாரணை

(f) Right to passage case

கடந்து செல்லும் வழியுரிமை வழக்கு

(g) International seabed authority.

நாட்டிடை கடல் அடித்தள அதிகார அமைப்பு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. State 'X' has discovered a State 'Y'. State 'Y' has been abondoned by State 'X'. Thereafter State 'Z' has exercised its sovereignty over State 'Y'. Now, the State 'X' is claiming right over State 'Y' but State 'Z' has denied. Whether State 'X' has right to claim State 'Y' in international law?

'Y' என்ற நாட்டை 'X' நாடு கண்டுபிடித்தது. அதன் பிறகு அந்நாட்டை 'X' நாடு கைவிட்டுவிட்டது. பின்னர் 'Z' நாடு 'Y' என்ற நாட்டின் மீது தனது இறையான்மையை செலுத்தியது. மீண்டும் 'X' நாடு 'Y' நாட்டின் உரிமையை கோரியது அதற்கு 'Z' நாடு மறுப்பு தெரிவித்தது. இதில் பன்னாட்டு சட்டத்தின் கீழ் 'Y' நாட்டின் உரிமையை 'X' நாடு கோர முடியுமா?

9. Steamship Lotus and the Steamship Boz-Kourt met with a collision on the open sea. As a result of such collision, the Steamship Boz-Kourt sunk resulting in the death of eight members. Thereafter, when steamship Lotus arrived at Constantinople, the Government of Steamship Boz-Kourt instituted joint criminal proceedings against the Captain of the both vessels and both of them were sentenced to imprisonment. The Government of Steamship Lotus protested on the ground that the Government of Steamship Boz-Kourt has no jurisdiction over an act committed on the open sea by a foreigner on board a foreign vessel, whose flag state has exclusive jurisdiction as regards such acts. Whether the State of Steamship Lotus will win the case?

திறந்தவெளி கடலில் லோட்டஸ் நீராவிக்கப்பலும், பாஸ்-காட் நீராவிக்கப்பலும் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டன. இதன் விளைவாக பாஸ்-காட் நீராவிக்கப்பல் மூழ்கி அதில் இருந்த எட்டு நபர்களும் இறந்து விட்டனர். நீராவிக்கப்பல் லோட்டஸ் கான்ஸ்டான்டைன்நோப்பில் அடைந்தவுடன் பாஸ்-காட் நீராவிக்கப்பலின் நாடு, இரண்டு கப்பலின் கேப்டன்களின் மீதும் இணைந்த குற்றவியல் நடவடிக்கையை தொடர்ந்து அவர்களுக்கு சிறைத் தண்டனையைப் பெற்றுக் கொடுத்தது. இத்தண்டனையை லோட்டஸ் நீராவிக்கப்பலின் நாடு ஆட்சேபனை செய்தது. ஏனெனில் அச்செயலானது ஆள்கடல் பகுதியில் வெளிநாட்டினரால் செய்யப்பட்டது ஆகும், ஆதலால் எந்த நாட்டுக் கொடி லோட்டஸ் நீராவிக்கப்பலில் பறந்ததோ அந்நாட்டுக்கு தான் அதிகாரவரம்புடையது தவிர பாஸ்-காட் நீராவிக்கப்பலின் நாட்டுக்கு இல்லை என கூறி தனது எதிர்ப்பை தெரிவித்தது. இவ்வழக்கில் லோட்டஸ் நீராவிக்கப்பல் நாடு வெற்றி பெறுமா?

10. State 'A' is located on the coast of the strait as an international waterway as per the provisions of a Treaty. A vessel S.S. Robinhood, belonging to the State 'B' was stopped by State 'A' on the ground that it was carrying arms and ammunition to a third country which was at war with State 'C', an ally of State 'A'. The State 'B' challenged this act in the ICJ, contending that the act violates the provisions of the treaty, of which both states were parties, which provides for free passage of all vessels of all nations at peace with the State 'A'. State 'A' on the other hand, relied on an international custom which permitted stopping of vessels carrying arms and ammunition which could be used against any ally of State 'A'. Whose claim shall succeed?

ஒரு உடன்படிக்கையின்படி 'A' நாடு சர்வதேச நீர்வழியில் அமைந்த நாடு ஆகும். 'B' நாட்டைச் சார்ந்த S.S. ரோபின்குட் கப்பலை 'A' நாடு தடுத்து நிறுத்தியது. ஏனெனில் ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகளை மூன்றாவது நாட்டுக்கு எடுத்துச் சென்றது. அந்த மூன்றாவது நாடு 'C', நாட்டுடன் போர் புரிந்துக் கொண்டிருந்தது. நாடு 'C' னது 'A' நாட்டின் நட்பு நாடு ஆகும். 'B' நாடு சர்வதேச நீதிமன்றத்தில் உடன்படிக்கையை மீறியதற்காக 'A' நாட்டுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தது. மேலும் இவ்விரு நாடுகளும் அவ்வுடன்படிக்கையின் உறுப்பு நாடுகள் ஆகும். உடன்படிக்கையின்படி, 'A' நாட்டுடன் எல்லா காலத்திலும் நல்லுறவைக் கொண்ட நாடுகளின் கப்பல்கள் அந்த வழியாக செல்லாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மாறாக நாடு 'A' சர்வதேச வழக்காறு சட்டத்தின்படி ஆயுதங்களையும் வெடிப்பொருட்களையும் தனது நல்லுறவு நாட்டிற்கு எதிராக எடுத்துச் செல்வதை தடுத்து நிறுத்துவதற்கு உரிமை உண்டு என வாதிட்டது. இதில் யாருடைய கோரிக்கை வெற்றி பெறும்?

---